தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 21, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
> பெற்றான் பொருள்வைப் புழி."

ஏழைகளின் பெரும்பசியைப் போக்க வேண்டும். அந்த ஈகை அறமே ஒருவர் தான் பெற்றிருக்கும் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் பயன்படும்படியாகச் சேர்த்து வைக்கும் பாதுகாப்புப் பெட்டகமாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

நூலகத்திற்குக் கட்டடம்

***53434—திரு. எஸ். நாகராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உள்ள நூலகத்திற்கு நவீன வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில், 1956 ஆம் ஆண்டில் மானாமதுரை கிளை நூலகம் தொடங்கப்பட்டு, பின்னர் 2008 ஆம் ஆண்டில் முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தப்பட்டு உள்ளது. அந்த நூலகத்திற்கு 1,080 சதுர அடி பரப்பளவில் சொந்தக் கட்டடமும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த நூலகத்தில் நூல் இரவல் பிரிவு, Civil Service பிரிவு, பத்திரிகைப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, கணினிப் பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. இந்த நூலகத்திற்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்துதரப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாணவர்களுடைய நலன் கருதியும், அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதியும் நவீன வசதிகளுடன்கூடிய கட்டடங்கள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன் அவர்கள்.

திரு. எஸ். நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்குச் சீமையின் தங்க மகன், சேலத்துச் செம்மல், குடிமராமத்து நாயகன், வேளாண் மண்டலம் காத்த காவேரியின் பாதுகாவலர், மாண்புமிகு முதலமைச்சர் அய்யா, எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பண்பும், பணிவும் கொண்ட ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அருமை அய்யா ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். சிவகங்கைச் சீமையின் மண்ணின் மைந்தன், எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய மானாமதுரை தொகுதி, மானாமதுரை நகரில் உள்ள நூலகம் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதில் மக்கள் அமர்ந்து படிக்க போதிய இடவசதி இல்லாததால், நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடத்தை அங்கு கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நூலகத்தில் பொது மக்கள் படிப்பதற்கு இடவசதி இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அங்கு கூடுதலாக புதிய கட்டடம் கட்ட இடம் இருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 சதவீதம், நூலக நிதியிலிருந்து 50 சதவீதம் நிதியைக் கொண்டு, புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன் அவர்கள்.

திரு. எஸ். நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில், எனது தொகுதியில், திருப்புவனம் வட்டம், கானூர் கிராமம் அருகே கானூர் கண்மாய் மற்றும் 18 குளங்களுக்கு நீர் வழங்கும்பொருட்டு, வைகை ஆற்றின் குறுக்கே ஒரு படுகை அணை அமைக்க ரூ.28 கோடியே 70 இலட்சத்தை அள்ளித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு என் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள மானாமதுரை கிராமத்தில், கீழப்பசலை மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும்பொருட்டு, வைகை ஆற்றின் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்ட ரூ.17 கோடியே 10 இலட்சத்தை வாரி வழங்கிய வள்ளல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் மகத்தான பல வரலாற்றுச் சாதனைகளைப் படைத்துவரும் வரலாற்று நாயகன் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அந்த நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுத்தால், மானாமதுரை பகுதி மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

மேலும், திருப்புவனம் ஒன்றியத்தில் உள்ள உலகப்பிரசித்திபெற்ற கீழடி கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். இதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுப்பாரா என

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரிய சாதனைகளை விளக்கும் வகையில், அவருடைய மாவட்டத்தில் படுகை அணை மற்றும் அணைக்கட்டு அமைக்க நிதி வழங்கிய வரலாற்றையும், மற்ற வரலாறுகளையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, நூலகத் துறையைப் பொறுத்தவரையில், எங்கெங்கே புதிய நூலகங்களை உருவாக்க வேண்டுமோ, அதற்கான பணிகளை நிதிநிலைமைக்கேற்ப இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், அண்ணா நூலகத்திற்கு ரூ.6 கோடி நிதி வழங்கி, வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ச் சங்கம் வளர்த்த மதுரை மாநகரத்தில் உள்ள நூலகத்தை மேம்படுத்திட ரூ.5,57,00,000/– நிதி ஒதுக்கப்பட்டு, இன்றைக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக அங்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10–05

நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித் துறையோடு சேர்ந்து நூலகத் துறையையும் சிறப்பான முறையில் வழி நடத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், அங்கே இருக்கின்ற மக்கள் அனைவரும் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு பல்வேறு பணிகளை நிறைவேற்றி வருகிறார்கள். ஆகவே, நூலகங்களைப் பொறுத்தவரையிலும், எங்கெங்கே அதுபோன்ற நிலை இருக்கிறது என்பதை ஆய்ந்து, இந்த அரசு உரிய பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.